தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 7, சுக்ல, திருவள்ளுவர் ஆண்டு-2021.

1990, மார்ச் 21, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்)

'' வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.''

மற்றெவர்க்கும் ஒரு சிறிதும் தீமை பயக்காத சொற்களைச் சொல்வதே வாய்மை எனப்படும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மதுவிலக்கு சம்பந்தமான வழக்குமீது வசூலிக்கப்படும் தொகை.

*902. திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுவிலக்கு சம்பந்தமான வழக்கு மீது வசூலிக்கப் படும் தொகையை நீதிமன்றங்கள் பெற்றுக் கொள்ளாததால் அந்தத் தொகை மதுவிலக்குப் பிரிவு காவல் துறையிடமே இருப் பது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தொகை எவ்வளவு?

(இ) அந்தத் தொகையை அரசு பெற்றுக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகள்மீது நீதி மன்றத்தால் விதிக்கப்படும் தண்டத் தொகையை, நீதிமன்றங் களே பெற்றுக் கொள்கின்றன. ஆனால், கள்ளச் சாராயம் விற்பவர்களைக் கைது செய்யும்போது, அவர்களிடம் கைப்பற் றப்பட்ட தொகைகளை நீதிமன்றத்தில், நீதிமன்றம் வேண்டும் போது, ''அந்தத் தொகை இருந்தபடியே'' சமர்ப்பிக்க வேண்டு மென் நீதிமன்றங்கள் வலியுறுத்துகின்றன. இத்தொகையை காவல் துறையினர்கள் பாதுகாப்பாக வைத்து வருகிறார்கள்.

(ஆ) ரூபாய் 5,84,325.56.

(இ) அரசுக் கருவூலங்களில் இத்தொகை வைக்க முடியுமா என ஆராயப்பட்டு வருகிறது.

திரு. செ. நூர் முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற பொழுது, கள்ளச் சாராயப் பேர்வழிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொகையை, மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகள் மீது வசூலிக்கப்படுகின்ற தொகை பற்றியும் குறிப்பிட்டார்கள். இப்படிக் கிடைக்கின்ற தொகைகளைக் குடியினால் வருகின்ற கேடு குறித்து மக்கள் மத்தியிலே பிரச்சார இயக்கம் நடத்துவதற்கு அரசு பயன்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனை, ஏற்கனவே இதுபோன்ற ஒரு கருத்து, மதுவிலக்கு தளர்த்தப்பட்டாலும்கூட, பிரச்சாரம் மூலமாக மதுவின் தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற கருத்து முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களாலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராய வழக்குகள் சம்பந்தமாக இதுவரை அரசுக்குக் கிடைத்துள்ள தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக குற்றங்களின் காரணமாக நடைபெற்ற வழக்குகளில் கடந்த காலத்தில் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 1–6–1989 முதல் 1–2–1990 வரையில் சில நேர்வுகளில் கம்பவுண்ட் செய்யலாம். அதாவது குற்றவாளிகள், அவர்களே குற்றத்தை ஒத்துக்கொண்டு அபராதம் கட்டுவது என்கின்ற முறையில் 64,388 வழக்குகளில் 3,58,93,815 ரூபாயும்; நீதிமன்றங்களில் நடைபெற்று தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள் 3,81,179; அதன் மூலமாக அபராதத் தொகை 6,07,04,040 ரூபாயும் சேர்த்து, மொத்த வருவாய் 9,65,97,855 ரூபாய் அபராதமாகக் கிடைத்திருக்கிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு சம்பந்தப்பட்ட துறைக்கென்று ஒரு போலீஸ் இலாக்காவும், லா அண்டு ஆர்டர்-க்கு என்று ஒரு போலீஸ் இலாக்காவும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இவர்கள் இருவருமே இந்தக் கள்ளச் சாராய வழக்குகள் மற்ற மதுவில்க்கு சம்பந்தமான வழக்குகளைப் பிடித்து,

1990 மார்ச் 21]

அவரவர்கள் இஷ்டத்திற்கு, எங்கோ ஓர் இடத்தில் போய் வைத்துக்கொண்டு அவர்களிடத்திலே அபராதம் என்ற பெயரால் சில தொகைகளைப் பெற்றுக் கொண்டு விட்டு விடுகிறார்கள். இது சம்பந்தமாக, எங்களைப் போன்றவர்களிடத்திலே அவர்கள் வந்து சொன்னால், நாங்கள் போய் கேட்கும்போது, அது எங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று ஸ்தலத்திலே இருக்கிறவர்கள் சொல்லிவிடுகிறார்கள். இப்படித் தெரியாமலேயே ஒரு தவறு நடந்து கொண்டிருக்கிறது. இதை அரசே ஒருமுகப்படுத்தி இப்படித் தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு ஏதாவது வழிவகை காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகளையெல்லாம் தீர்த்திட வேண்டுமென்பதற்காகத்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே மதுவிலக்கு குறித்த ஒரு கொள்கை மாற்றம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த மதுவிலக்குக் குற்றங்களால் ஏற்படுகிற சங்கடங்கள் போன்றவற்றிற்காக அபராதம் விதிக்கிறார்கள். அதை கோர்ட்டில் செலுத்தி வந்தார்கள் முன்பெல்லாம். இப்போது மதுவிலக்கு போலீஸ்காரர்களிடம் அந்தத் தொகை இருப்பதால், அதுபோன்ற இலட்சக்கணக்கான ரூபாய்க்கு வட்டி யார் தருவது? தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் அந்தப் பணத்தைப் போட்டால் வட்டி வரும். வேறு யாரிடமாவது கொடுத்திருந்தாலோ அல்லது பாங்கில் பிக்சட்டில் போட்டாலோ வட்டி வரும், அதைப்பற்றி கவனிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது குறித்துத்தான் அரசுக் கருவூலங்களில் அந்தத் தொகையை வைக்க முடியுமா என்று ஆராயப்பட்டு வருகிறது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன்.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு சம்பந்தமாக நமது தமிழ்நாட்டில் எத்தனை வழக்குகள் பெண்டிங் ஆக இருக்கின்றன என்பதை அரசு வெளியிடுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கம்பவுண்ட் செய்யப்பட்ட வழக்குகள் 64,358. நீதிமன்றத்தில் தீர்க்கப்பட்ட வழக்குகள் 3,81,179 என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எஞ்சியுள்ள வழக்குகள் எத்தனை என்ற விபரம் என்னிடத்திலே இல்லை.